1990 மார்ச் 30]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள கே. புதூர் தொழிற்பேட்டையில் மூன்று சிறு தொழில் முனைவோர்களுக்கு காலி மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே அங்கே தொழிற்கூடங்களில் சிறு தொழில் செய்பவர்களுக்குத் தான் அந்த மனைக்கு அருகில் இருக்கிற காலி இடங்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தனியார் யாருக்கும் அந்த இடத்தில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3121, 3432, மற்றும் 4669 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

திருச்சி நகரில் பாதாள சாக்கடை

*வினா 487—திரு. அன்பில் பொய்யாமொழி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) திட்டத்திற்கான செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) திருச்சி நகருக்கான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அரசு ரூ. 285.06 இலட்சங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்போது இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ. 677.50 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில் நுட்பக் குழு, வாரியக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நீரேற்றிப் பொருத்தும் பணிகள் தவிர மற்ற பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

[1990 மார்ச் 30

திரு. அன்பில் பொய்யாமொழி : தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தத் திட்டம்—பாதாள சாக்கடை திட்டம் இந்த ஆண்டு திருச்சி நகரில் செயல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அதற்கான பணிகள் இந்த ஆண்டு வேகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதற்காக கொடுக்கப்பட வேண்டிய 2,408 வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 22,494 இணைப்புகள் கொடுக்கப்பட இருக்கின்றன. எவ்வளவு விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு விரைவில் அரசு அதை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பித்து பல வருடங்கள் ஆகிவிட்டன. நான் பால்யமாக இருந்தபோது ஆரம்பித்த திட்டம் இது. இன்றைக்கு நான் முதியவனான பிறகும் இந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. நடக்காமல் இல்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திட்டத்திற்கு மணிவிழாக் கொண்டாட வாய்ப்பு இருக்கிறதா ! (சிரிப்பு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னால் அங்கே அமைச்சர்களை கூப்பிட்டு ஒரு விழா நடத்தி விடுகிறேன். இந்தத் திட்டத்தால் பல பகுதிகள் பலன் அடைந்திருந்தாலும், அதனால் பலன் இல்லாமல் அவதிப்படுகிற கிராமங்கள் நிறைய இருக்கின்றன. இந்தத் திட்டத்தில் சூவரேஜ் பார்ம் ஒன்று ஆரம்பித்து அது செயலற்று இருக்கிறது. பெரிய குளம் ஒன்று கோரையாற்றுப் பக்கத்தில் அமைத்து அதில் சாக்கடை தண்ணீரை பம்ப் செய்து விடுகிறார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதனால் அவதிப்படுகிறார்கள். அந்தக் குளம் சரியாக அமைக்கப்படாததால் அது உடைந்து விடுகிறது. இதன்காரணமாக கோரையாற்றில் வாட்டர் பொலூஷன் ஏற்படுகிறது. போன மாதத்தில் இதனால் பெரிய தகராறு ஏற்பட்டு அங்கேயிருக்கிற எம்.பி.யும் நானும் போய் சமரசம் செய்தோம். எனவே, இதைத் தவிர்த்து இந்தத் திட்டத்தை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்தத் திட்டம் கிடப்பில் கிடப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான இந்தப் பணிகளை வேகப்

1990 மார்ச் 30]

படுத்தி இருக்கிறார்கள். இப்போது பகுதி 6 மற்றும் 2 (ஏ) ஆகிய இடங்களில் மட்டும் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்ற பகுதிகளில் எல்லாம் இந்தப் பணி கள் முடிந்து விட்டன. இந்த ஆண்டிற்குள்ளாக இந்தத் திட்டம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனை

*6521—திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு அவைத் தலைவர் அவர் களே, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா நகரமாக இருப்ப தால், அங்குள்ள அரசு மருத்துவமனையில் உள்ள படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும் அந்த இடத்தைக் கொஞ்சம் விஸ் தரிப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்து தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப் போது காட்டுமன்னார்கோயில் மருத்துவமனை 8 படுக்கை வசதிகளோடு கூடிய மருத்துவமனையாக அது இயங்கி வரு கிறது. அங்கே அறுவைச் சிகிச்சை அரங்கம், பிணவறை போன்ற